| Headline | TNB appoints Ong Ai Lin as independent director | | |
|---|---|---|---|
| MediaTitle | Makkal Osai | | |
| Date | 13 Jul 2018 | Language | Tamil |
| Circulation | 28,000 | Readership | 180,000 |
| Section | News | Page No | 2 |
| ArticleSize | 86 cm² | Journalist | NULL |
| PR Value | RM 1,001 | | |
| | | | |



# டி.என்.பி.யின் சுயேச்சை இயக்குநராக ஓங் அய் லின் நியமனம்

கோலாலம்பூர் , ஜூலை 13– டி.என்.பி. நிறுவனத்தின் சுயேச்சை இயக்குநராக ஓங் அய் லின் நியமிக்கப்பட்டார்.

வரும் ஆகஸ்டு மாதம் 1ஆம் தேதி முதல் அவருக்கான அந்தப் பொறுப்பு அமலுக்கு வருவதாக டி.என்.பி. அறிவித்தது. 62 வயதான ஓங்கின் நியமனம் டி.என்.பி.யின் நிர்வாகத் தலைமைத்துவத்திற்கு அப்பாற்பட்ட சுயேச்சை இயக்குநராக அமைந்திருக்கிறது.

இங்கிலாந்து லீட்ஸ் பல்லைக்கழகத்தில் பொருளாதாரத் துறையில் இளங்கலைப் பட்டப்படிப்பை முடித்தவர் ஓங். இங்கிலாந்தின் வேல்சில் உள்ள சார்ட்டர் அக்கவுண்ட்ஸ் கூட்டமைப்புக் கழகத்தின் உறுப்பினராகவும் அவர் பொறுப்பு வகிக்கிறார்.

டி.என்.பி.யில் இணைவதற்கு முன்னர் அவர் மலேசியா பிரைஸ்வாட்டர்ஹவுஸ் கூப்பர்சில் உயர் இயக்குநராகப் பொறுப்பேற்றிருந்தார். கடந்த 2016ஆம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கி டிசம்பர் மாதம் வரையில் அவர் அந்தப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

Powered by: iSENTIA